# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 92** **நாள்: 31.07.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களை ஆந்திர மாநிலத்தின் மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் சந்தித்து அம்மா உணவகங்கள் மற்றும் அம்மா குடிநீர் செயல்பாடுகளை கேட்டறிந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களை இன்று (31.07.2017) ரிப்பன் மாளிகையில் ஆந்திர மாநில அரசின் திருப்பதி, கடப்பா, காக்கிநாடா, எல்லூரு, ஓங்கோல், சித்தூர், குண்டூர், அனந்தப்பூர், நெல்லூர், ஸ்ரீகாகுளம் மாநகராட்சிகள் மற்றும் மச்சிலிப்பட்டினம், விஜயநகரம், ராஜமுந்திரி நகராட்சிகளைச் சார்ந்த ஆணையாளர்கள் மற்றும் அலுவலர்கள் சந்தித்து அம்மா உணவகங்கள் மற்றும் அம்மா குடிநீர் ஆகியவற்றின் செயல்பாடுகளை கேட்டறிந்தனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளில் உள்ள 400 அம்மா உணவகங்கள் மற்றும் 7 அரசு பொது மருத்துவமனைகளில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களின் செயல்பாடுகள் குறித்தும், அம்மா உணவகத்திற்கு தேவையான அரிசி, காய்கறிகள், கோதுமை, எரிவாயு சிலிண்டர் போன்ற பொருள்கள் குறித்தும், இங்கு வேலை பார்க்கும் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை குறித்தும், பணியாளர்களின் பணி நேரம் குறித்தும், சுத்தமான, சுகாதாரமான, சுவையான உணவு தயாரிக்கும் முறை குறித்தும், சுத்தமான தண்ணீர் வழங்கப்படும் முறை குறித்தும், பாத்திரங்கள் கழுவ பயன்படுத்தும் முறைகளும், நாள்தோறும் விற்பனையாகும் உணவுகள் குறித்தும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 50 இடங்களில் செயல்பட்டு வரும் அம்மா குடிநீர் மையங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குறித்தும் விளக்கப்பட்டது.

பின்னர், ஆந்திர மாநிலத்தின் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் ஆணையாளர்கள், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகம், அண்ணாநகர் மண்டலம், வார்டு–107, ஹாரிங்டன் சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகம் ஆகியவற்றை பார்வையிட்டனர். இந்த அம்மா உணவகங்களில் உள்ள பொருள்கள் வைக்கும் அறை, சமையலறை, சாப்பாடு வழங்கும் இடம், சாப்பிடும் அறை, பாத்திரங்கள் கழுவும் அறை, சாப்பிடுவதற்கு டோக்கன் வழங்கும் இடம் ஆகியவற்றை பார்வையிட்டு, அங்கு வழங்கப்படும் உணவுகளை சாப்பிட்டு, உணவு தரமாகவும், சுகாதாரமாகவும், சுவையாகவும் இருப்பதாக பாராட்டினார்கள்.

அம்மா உணவகத்தில் சாப்பிட்டு கொண்டிருந்த பொதுமக்களிடம் இங்கு வழங்கப்படும் உணவுகளின் தரம், சுவை, சுகாதாரம் போன்றவை குறித்து கேட்டறிந்தனர். அதற்கு பொதுமக்கள் விலை குறைவாக, சுத்தமாக, சுகாதாரமாக மற்றும் சுவையான உணவுகள் இந்த அம்மா உணவகத்தில் வழங்கப்படுவது எங்களுக்கு பெரிய வரப்பிரசாதமாக உள்ளது எனத் தெரிவித்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகங்களின் செயல்பாடுகள் குறித்து இதற்கு முன்பு, எகிப்து நாட்டைச் சார்ந்த அலுவலர்கள், ஆந்திரா, ராஜஸ்தான், கர்நாடகா, புதுடில்லி, குஜராத், மஹாராஷ்டிரா, ஜார்கண்ட், சத்திஸ்கர், ஹரியானா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அலுவலர்களும் பார்வையிட்டு, தங்கள் நாடு மற்றும் மாநிலங்களில் இத்திட்டத்தை செயல்படுத்தப் போவதாக கூறியது குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து, அம்பத்தூர் மண்டலம், வார்டு–89, அம்பத்தூர் தொழிற்பேட்டை சாலையில் அமைந்துள்ள அம்மா குடிநீர் மையத்தில் ஸ்மார்ட் கார்டு மூலமாக குடங்கள் மற்றும் கேன்களில் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விலையில்லாமல் விநியோகிக்கப்படுவதை பார்வையிட்டு, பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீரை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வழங்குவதை பாராட்டினார்கள். இத்திட்டங்களை தங்களது மாநிலங்களில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் செயல்படுத்த போவதாகவும் கூறினார்கள்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (சுகாதாரம்) திருமதி.எம்.விஜயலட்சுமி, இ.ஆ.ப., திருப்பதி மாநகராட்சி ஆணையாளர் திரு.சி.ஹரிகிரண், இ.ஆ.ப., ஸ்ரீகாகுளம் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.பி.ஏ.ஷோபா, இ.ஆ.ப., கடப்பா மாநகராட்சி ஆணையாளர் திரு.சந்திரமௌலீஸ்வர் ராவ், காக்கிநாடா மாநகராட்சி ஆணையாளர் திரு.அலிம்பாஷா, எல்லூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.சாய் ஸ்ரீகாந்த், ஓங்கோல் மாநகராட்சி ஆணையாளர் திரு.வெங்கட கிருஷ்ணா, சித்தூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பாலசுப்பிரமணியம், குண்டூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.அனுராதா, அனந்தபூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பி.வி.எஸ்.எஸ். மூர்த்தி, நெல்லூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.டில்லி ராவ், மச்சிலிப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் திரு.ஜஸ்வந்த் ராவ், விஜயநகரம் நகராட்சி ஆணையாளர் திருமதி.கனக மகாலட்சுமி, ராஜமுந்திரி நகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.டி.தணிராம், பெருநகர சுகாதார அலுவலர் திரு.என்.ஏ.செந்தில்நாதன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

பெருநகர சென்னை மாநகராட்சி